# திறவுகோல்

2057 / மாசி

மாத இதழ்



வெளியீடு:
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# தடமற்ற வாழ்வில் தடயமற்ற வாக்குறுதிகளின் நகர்தலில்…




*தற்கொலைகளின் துரத்தல்களில் தன்மானத்தைக் காப்பதற்காக தமது வாழ்வையே தொலைத்து நிற்கும் வெள்ளந்தி மனிதர்கள் எல்லாச் சிறுகதைகளிலும் இடம்பிடிக்கின்றனர். வாழும் வாழ்வை யாரும் குறை சொல்லாமல் யாரிடமும் கையேந்தாமல் குறையறியா மாந்தர்களாக வாழ்வதே அவர்களின் எழுதப்படாத விதியாகிறது.*

*ஆனால் வாழ்வெனும் நதியின் போக்கு ஒற்றைத் தளத்தை பற்றி கொண்டு நேர் பாதையிலும் சமவெளியிலும் ஓடும் ஓட்டம் அல்லவே மேடுகளும் பள்ளங்களும் துன்பங்களும் துயரங்களும் துரத்திக் கொண்டு வரும் நேரம் அறியா காலத்தில் நம்மை திசை திருப்பி விடும் வாழ்வின் பயணத்தில் அவர்களால் தம்மை காத்துக் கொள்ள முடியாமல் தடுமாறிப் போகிறார்கள் தடம் மாறியும் போகிறார்கள்.*

*எல்லா துரத்தல்களுக்கும் சாவுதான் எல்லை என அதைத் தழுவி கொள்கிறார்கள் வாழ வழியற்றும் ஊராரின் நகைப்புக்கு ஆளாகும்.*

*அவலச் சொல்லிலிருந்து மீண்டெழவும் அவர்களுக்கு மரணமே வாழ்வளிக்கிறது பிறர் வாழ்வதற்காக தம் வழித்தடத்தையே அவர்களுக்கு வழங்கி மகிழ்ந்த மனிதர்களுக்கு அவர்களாலேயே வாழ்வு அறுபடும் என்ற கூர் கத்தியை அவர்கள் எப்போதுமே நினைத்துப் பார்க்கவில்லை தம்மை வாழவைத்துக் கொண்டிருக்கும் ஆடுகளையும் மாடுகளையும் விற்றுவிட்டு அடுத்தவர் கையேந்தி கூலிக்காக ஓடும் அந்த வெள்ளந்தி மனிதர்களை நூல் காட்சிப்படுத்துகிறது ஆராய்ச்சி பட்டி என்ற ஒற்றை ஊரில் இத்தனை குணங்கள் கொண்ட மனிதர்களும் இத்தனை செயல்களை அடக்கி வைத்திருக்கும் சாயமலையும் இன்னும் உயிர்ப்புடன் இருப்பதற்கு அந்த மனிதர்களின் வாழ்வே சாட்சியாகிறது நூலின் 12 சிறுகதைகளும் எளிய மனிதர்களின் துன்பங்களை அவர்களின் வாழ்வியலோடு நம்மையும் பிணைத்து விடுகிறது.*

*எல்லா கதை மாந்தர்களும் நல்லவர்களாக படைக்கப்படும் போது ஒரு சிலரின் வஞ்சக எண்ணங்கள் எல்லோரது வாழ்வையும் முடித்து விடுகிறது.*

*நிலத்திற்காகவும் சொத்திற்காகவும் அண்ணன் தம்பிகள் போராட்டம் அன்றிலிருந்து இன்றைய கணினி யுகம் வரை தொடர்கிறது காட்சிகள் தான் மாறுகிறதே ஒழிய கருவிகள்*

புதிதாகிறது ஆனால் மனம் இன்னும் பேராசையில் பற்றி கொண்டு நகர மறுக்கிறது.

எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதை யார் அறிவார்? அவரவர் வாழ்விற்கு சாதகமான பலன்களை சொல்வதாலேயே ஜாதகம் என்று பெயர் பெற்றது ஆனால் எல்லா ஜாதகப் பலன்களும் இப்போதும் பலனளிப்பதில்லை எனில் மக்களின் அறியாமையையும் மூடநம்பிக்கையையும் அச்சத்தையும் தமது பலமாகக் கொண்டு வாழும் ஜோதிடர்களின் வாக்கு எப்போதும் பிற குடும்பங்களை வாழ வைக்க உதவுமானால் சிறப்பாகும் இங்கே ஒரு ஜோதிடர் கூறிய பொய்யால் ஒரு குடும்பமே தமது வாழ்வை தொலைத்து நிற்கையில் இறுதியில் ஜோதிடரும் தனது பாவத்திற்கு உரிய சம்பளத்தை பெற்றுக் கொள்கிறார்.

ஊர்க்கினறு அரியநாச்சியை அபகரித்துக் கொண்டதை எழுதும் கதையில் குடியில் வாழும் ஆண்களை கொண்டாட முடியாமல் தவிக்கும் பெண்கள் தங்கள் குடும்பத்தை நடத்திச் செல்வதற்கு படும் பாட்டையும் அக்கம் பக்கத்தில் அதனால் விளையும் சண்டையையும் காட்சிப்படுத்துகிறது கிணற்றில் நீர் சேர்ந்துகையில் வாளியும் கயிறு உள்ளே விழுந்து விட அதை எடுப்பதற்காக அரியநாச்சி படும் பாடும் அவரது அம்மா அவளை துன்புறுத்தும் காட்சிகளும் வாசிக்கையில் நம் நெஞ்சை ரணப்படுத்துகின்றன.

கதைகளில் எங்கும் கல்வியின் சுவடுகள் பதியவே இல்லை கதாபாத்திரங்கள் எப்போதும் கோபமும் பாவமும் கொண்டே உலவுகிறார்கள். சிந்தனையின் வீச்சை அவர்கள் எப்போதுமே அறியாமலேயே நகர்கிறார்கள். அதுவே அவர்கள் உடனடியாக தடுமாறி போவதற்கு மூல காரணமாக அமைந்து விடுகின்றன கொடுத்த வாக்கை காப்பாற்றுதல் என்ற எண்ணம் உடையவர்கள் அதை நிறைவேற்றுவதற்கு தங்கள் வாழ்வையே ஒப்படைத்துக் கொள்கிறார்கள்.

உரையாடல்களிலும் கதையை நகர்த்திச் செல்லும் பாங்கிலும் தனது முதல் தொகுப்பிலேயே முச்சிலன் பாரதி முத்திரை பதித்து விடுகிறார் கிராமத்துச் சொல்லாடல்களும் மக்களின் அன்றாட வாழ்வில் வெளிப்படும் பழமொழிகளும் கதைகளுக்கு அழகு சேர்க்கின்றன கதையின் இடையில் ஆங்காங்கே தென்படும் உரைநடைத் தன்மையை குறைத்துக் கொண்டால் இன்னும் கிராமத்து பாங்கின் அழகு வாசிப்போருக்கு முழுமையாக வெளிப்படக்கூடும்.

சாய மலையிலிருந்து ஒரு எரிகல் என்ற சிறுகதை தீண்டாமையின் அடிச்சுவட்டை எட்டிப் பார்க்கிறது புதிதாக ஊருக்குள் வரும் நபரின் சாதியை அறிந்து கொள்வதற்கு அந்த மக்கள் எப்படியெல்லாம் அவதாரம் எடுக்கிறார்கள் என்பதை டீக்கடை பணியாள் மூலம் வெளிப்படும் விளக்கம் தீண்டாமை சூட்டை எரியவைக்கிறது.

பல கதைகளில் பெண்கள் தற்கொலைக்கு தம்மை ஒப்படைத்துக் கொள்ளும் தருணத்தில்

செங்காட்டுப்பூ அதிலிருந்து தனித்து மணம் வீசுகிறது. தனது வாழ்வு சீரழிந்த போதிலும் தன்னை நம்பி இருக்கும் தங்கைகளுக்காக வாழப் புறப்படும் பெண்ணை அவளின் போராட்ட குணத்தை அது வெளிப்படுத்தி விடுகிறது.

காணாமல் அறிந்து கொள்ளாமல் எத்தனையோ கற்பனை கதாபாத்திரங்களை கொண்டு எழுதப்படும் ஊர்களுக்கு இல்லாத சிறப்பு தன் கண்முன்னே நிகழும் மனிதர்களை காட்சிப்படுத்துவதில் தனித்து தெரிகிறது. அவரவர் ஊரின் சிறப்பை ஆவணம் செய்தல் வரலாற்றை பதிவு செய்வதன் அவசியத்தை ஆராச்சிப்பட்டி வழியே முகிலன் பாரதி முன்னெடுத்து இருக்கிறார்.

இலக்கியங்களில் கதை கூறல் எல்லோருக்கும் எப்போதும் பிடித்தமான ஒன்றாக மாறி நிற்கிறது மனிதன் பிறப்பிலிருந்து இறப்பு வரை அவன் பெரும் அனுபவங்களில் கதைகளின் பங்கு அளப்பரியது. கேட்கும் கதைகள் நம்மை எப்போதாவது சிந்திக்கத் தூண்டுகின்றன ஒரு கணம் நாம் கடந்து வந்த பாதையின் வெப்பத்தை நமக்கும் கடத்துகின்றன கதைகளின் பெரும் பயனே அவை கொடுக்கும் மூச்சுக்காற்றை நமக்கான வாழ்வின் அடித்தளமாக மாற்றிக் கொள்வதே எனலாம். கதை கேட்டே வளர்ந்த தலைமுறை இன்னும் கொஞ்ச நாளில் கருவிகளின் பின்னே தன்னை ஒப்படைத்துக் கொள்ளும் காலம் நெருங்கி விட்டது அப்படியானதொரு சூழலில் எங்கோ ஒரு மூலையில் கவனிப்பாறை கிடக்கும் கிராமத்தின் உயிர்ப்பையும் அதில் உலவும் மனிதர்களின் குண நலன்களையும் வரலாறாக்கியிருக்கும் எழுத்தாளரின் கவனம் இன்னும் நிறைய நிறைய கதைகளை வெளிக்கொணர இந்தப் பூ பாதை அமைக்கிறது.

செங்காட்டுப் பூ (சிறுகதைத் தொகுப்பு):
முகிலன் பாரதி

வெளியீடு:
தமிழ் வெளி, சென்னை.

பக்கம்: 110
விலை: ரூ.160/-
முதல் பதிப்பு டிசம்பர் 2025

--
இளையவன் சிவா

# கூட்டாஞ்சோறு

தைத் திங்களில்
வரும் பொங்கல்
பாட்டன் பாட்டி
ஆயி அப்பனோட
ஒட்டிப் பொறந்த
ஒண்ணு விட்ட
சொந்தமெல்லாம் கிராமத்துத்
குலதெய்வ கோவிலுக்கு
போனதென்ன!

அறுவடை முடிந்த
கரும்பு காட்டுக்குள்
எங்கள் பால்யத்தின்
கால்தடங்கள்
ஆடி ஓடி விளையாடியதென்ன

அரிசி பருப்பு
கட்டிக் கரும்பு
அச்சு வெல்லம்
கதம்பச் சாம்பாருக்கு
வகைவகையா காய்கறியும்
சுமந்து வரும்
பங்காளி மக்கா..!

கருங்கல் கூட்டி
விறகு போட்டு
தீ மூட்டி
ஒட்டு மொத்த
பெண்டீரும் ஒண்ணாகி
குலவை போட்டு

ஒத்தப் பானையில
வச்சப் பொங்கல்
ஊரே கூடி
முனீஸ்வரனுக்கு படைச்சதென்ன

மாட்டு வண்டி
மேல நின்னு
வெட்டிப் பகிர்ந்த
துண்டு கரும்பும்
பந்தி போட்டு
ஒத்துமையா பொங்கி
போட்ட பொங்கச் சோறும்

திண்ணு வெக்க
தவமாதவமிருப்போம்
கரும்பு காடு
தாண்டி வந்து
முண்டியடித்து கரும்பு
வாங்க காத்துக்கிடந்ததென்ன!

அந்த நாளில்
தைப் பொங்கல் தான்
நான் கண்ட அற்புதமான
கூட்டாஞ்சோறு!

*****

கானல் சந்தோசம்

குட்டி குட்டியாய் புள்ளிகளில்
குயவனின் நேர்த்தியோடு
பந்தயங்கட்டி பல வண்ணத்தில்
புதுப்புது பானைகள் செய்து

பனியொழுகும் நடுஇரவில்
விறகினிலே தீமூட்டிச் சமைத்து
பானை தனின்
அகன்ற வாயினின்று
வெண்பொங்கலும்,
சர்க்கரைப் பொங்கலும்

பொங்கி வழிய

கட்டிக் கன்னலும்
முற்றிய நெல்மணியும்
பருத்த மஞ்சக் கிழங்கும்
நீர் பெருத்த தேங்காயும்
கனிந்த வாழையும்
படையலென இட்டாச்சு
தத்ரூபமாய் வரைந்த கோலத்தில்

பொழுது புலர
விசும்பு கீறி
கற்றைக் கதிர்களோடு
வந்து சேர்கிற கதிரோனுக்கு

கிராமத்தை விட்டுப்
புலம் பெயர்ந்த எனக்கு
என் நகரத்து வீதியில்

இது தான் நான் படைக்கும்
பாரம்பரியம் மாறாத
சூரியப் பொங்கல்!

மற்றபடி
மூன்றுக்கு இரண்டரையடி
பூஜையறைக்குள்
கேஸ் அடுப்புப் பொங்கல் தான்

வரியடுப்பு வைத்து
குலவையொலி போட்டு
முனீஸ்வரன் கோயிலில்
பங்காளிக் கூட்டத்தோட
கும்பிட்டப் பொங்கலின்
நினைவை எப்படியும்
சமன்செய்ய இயலவில்லை

கிராமத்துத் தோழியொருத்தி
காணொளி அழைப்பில்
தைத்திருவிழாவின்
மெய்நிகர் தரிசனம்
காண்பிக்கையில்
கானல் சந்தோஷத்தோடு
நிறைகிறதென் தைத்திருநாள்

—

பி. ஹேமா,
முசிறி.

## தங்கம் விலை

வரலாறு காணாத உயர்வென்ற
நாளேட்டு செய்தியோடு
தேநீர் கடையில்
தொங்கிக் கொண்டிருந்தது
இன்று முதல்
தேநீர் விலைஉயர்வென்ற
அறிவிப்புப் பலகை

தேநீர் அருந்தியவாறு
மெல்ல சட்டைப் பையை
தொட்டுப் பார்த்த
கூலித் தொழிலாளி
முனுசாமிக்கு
கல்யாண வயதில்
இரண்டு பெண்கள்

— பா. சிவகுமார்

# போர்வை

உன்னைக் காதலிக்க
போதுமானதாக
இருக்கிறது

என்னை காப்பாற்றிக் கொள்ளும்
ஆயுதமாக இருக்கிறது

உயிர் வாழ வைக்கும்
காற்றாகவும் மாறி இருக்கிறது

பெரும்பாலான வேளைகளில்
என் பிணி தீர்க்கும் பானமாக இருக்கிறது

நான் சிறகு விரித்து பறந்திடப்
பெருவானமாகிறது

எனை
எதிர்ப்பின்றி
எச்சங்கடமுமின்றி
ஏந்திக் கொள்ளும் கிளையாகவும்
இருக்கிறது

நான் அதீதமாய்ப்பேசி
அளவளாவும் ஆழ்ந்த நட்புறவாகவும்

என் புனிதத்தின் புகழிடமாகவும்

நான் ஒளிந்து கொள்ளும்
புகலிடமாகவும்

நான் இறந்திடாமல் இருந்திடப்
பெருந்துணையாகவும் இருக்கிறது

கவிஞன் எனும் போர்வை!!

# பரிதாபங்கள்

நீ பார்க்கவில்லையதனால்
சுருங்கி விட்டது
என்னிதயம்

நீ பார்த்து விட்டாய்
இப்போது கொஞ்சம்
நிம்மதி...
ஆனாலும்,
இதயங்கள் இல்லாததில்
இன்னும் சுருங்கி விட்டது
இதயம்

முயற்சியில்
சற்றும் சளைக்காத
விக்கிரமாதித்தனாய் நான்...
அடுத்ததைப் பதிகிறேன்
அநாயாசமாய்க்காத்திருக்கிறேன்

நிச்சயம் கிடைக்கும்
இதயங்கள்...
நம்பிக்கைதானே வாழ்க்கை!

கதைகளின் பரிதாபங்கள்...

# அன்பின் பிணி

சிரிப்பு
களிப்பு
தவிப்பு
ஏமாற்றம்

வெப்புசாரம்
கண்ணீர்
அழுகை


எல்லாமே உரியவரிடம்
ஒப்புவிக்க வேண்டும்
என்றில்லை

எல்லாமே அந்தந்த நேரங்களில்
வருவதுதான்
கட்டுப்படுத்த முடியாது
சட்டென நெகிழும் ஜாதி நீ
அதை வழித்தெறிந்து
கடந்து செல்
ஒருநாளில்
ஒரு சொல்லில்,
ஒரு இரகசியக்குரலில்,
ஒரிசையில்
ஒரு இதயங்கீறும் பாடலில்,
வந்துன்
செவியடைந்தவை
ஞாபகங்கொள்ளும் வேளை
பேரமைதி கொண்டு
இதயம் புன்னகைக்கக் காண்பாய்

அன்பினியவள்,
அன்பின் பிணி போக்கத்தெரியாதவள்!

—

Dr. ஜலீலா முஸம்மில்,
ஏறாவூர், இலங்கை.



---

# ஒளி

சூரியன் என்ற ஒளி மூலம் இல்லாத
போதிலும்,

ஆங்காங்கே
தொங்கிக்
கொண்டிருக்கும்
வயர்களில் மின்சாரம்
இல்லாத போதிலும்,

சூரிய ஒளியால் வாழும் நிலவின் ஒளி
பிரதிபலிப்பு தெரியாத அமாவாசையாக
இருந்த போதிலும்,

இரவில் இரை தேடும் மின்மினியை
கோட்டான்கள்
குதறிய போதிலும்,

எண்ணிக்கையற்ற எண்ணிக்கையில்
சிறு ஒளியை கொடுத்த நட்சத்திரம் நீ
மட்டும் தான்.

—

மா. முத்துவேல் பாஸ்கர்,
இராஜபாளையம்.

# தாயோ

அரோ
மாதோ
மன்னோ
அம்மா என்று
அசைச்சொற்களைக் கொண்டு
நிறைய கவிதைகளை
நிறைவு செய்திருப்பான்
கம்பன்

அதுபோல்தான்
அம்மாவைப் பெற்ற தாத்தா
அம்மாவை
அருகில் இருந்துகொண்டு
அழைத்தால்
'தாயி' என்பார்

தூரத்தில் இருக்கும்போது
அழைத்தால்
கம்பனின்
அரோ மாதோ போல
தாயோ!'

அசைச்சொற்கள்
ஆசைச்சொற்கள்

அம்மம்மா என்றால்
அம்மாவின்
அம்மா மட்டுமா?

ஆசையாலும்
வியப்பாலும்
விளையும்
அசைச்சொல்லும் அல்லவா?

அம் என்றால் அழகு
அம் அம் மா என்றால்
அழகு அழகு அம்மா!

—

மு. ஆறுமுக விக்னேஷ்,
சத்திரப்பட்டி - 626102.

# உயர் தொழில் நுட்ப வகுப்பறையில்...

பால்வழி அண்டம் குறித்த
காணொலியை கண்டாலும் அதனை
கவனிக்க இயலாத மாணவனை
பார்த்து ஆசிரியர் கேட்டார்
காலையில் சாப்பிடவில்லையா
வீட்டில் அம்மா, அப்பாவுக்கு
ஏதேனும் சண்டையா என்று...

மாணவனின் கண்ணீர் நிறைந்த
விழித்திரையில் தெரிந்தது வேறொரு
பரிணாமம்...

—

நேசமுடன் ஈசு

# உளத்தூண்

சம்பந்தமில்லாமல்
சத்தம் போட்டு சிரிக்கும்
சாந்தமற்ற மனது

யார் யாரை
குறை கூறினாலும்
கூட்டு சேரும் வன்மம்

கடனுக்கு தரும் சிரிப்பும்
கடமைக்கு குலுக்கும் கையும்
இருமுனைக் கத்திகள்

விபத்தை ரசிக்கும்
வினோத குரோதம்
பின் இருக்கையிலும் இருக்கும்

ஒய்வெடுக்கச் சொல்லி
ஒழித்துக் கட்டவும்
யோசிக்கும் உளத்தூண்

காழ்ப்பும் ஏய்ப்பும்
வஞ்சமும் வக்கிரமும்
வடிகட்டிய பிறகும் சொட்டும்

## யாருக்கும் லைல்விடபரிபு

கண்ணாடி பிம்பமென
வீதி முகப்பு
பின்னோக்கி நடக்கும்
நாய்க்கு
வாலில் கண்கள்
இடது கை பக்கத்தில்
வலது பக்க திண்ணை
இந்தப் பக்க வீடெல்லாம்
அந்தப் பக்க வீடுகளாய்
உதிர்ந்த பூவையெல்லாம்
உரிந்தெடுக்கும்
மரக்கிளைகள்
நிலா
வீதியில் உருண்டபடி
நீலவானம்
தரை விரிப்பென
முடிந்த சத்தத்தில் இருந்து
முன்னே வரும் ஒலிப்பான்
தலைகீழ் பேச்சு
கொம்பென கால்கள்
யாருக்கும் லை ல் வி ட ப ரி பு
திசைகளை மாற்றி வைத்தவன்
தீர்ந்த புட்டியிலிருந்து
எட்டிப் பார்க்கிறான்

## கனவில் வரும் இறந்தவர்கள்

இறந்தவர்கள்
கனவில் வரும் போது
அவர்களை விட
உயரமாகவோ குள்ளமாகவோ
இருக்கிறார்கள்
குரல்கூட
யாருடையதாகவோ
மாறி இருக்கிறது
சாதாரண பார்வையும்
மிரட்டுவதாகப் படுகிறது
ஆடைகளை நாம் கவனிப்பதில்லை
உண்மையை ஆராயும் கண்கள்
அவர்களின்
நிறங்களை மறந்து விடுகிறது

எங்கிருந்து தொடங்குவது
எனத் தெரியாத
உரையாடல்களில்
எந்த மொழியில் பேசுகிறோம்
என்றும் புலப்படுவதில்லை
எதன் பொருட்டோ
களைந்து விடும் கனவு
திறந்த கண்களிலும்
திக்கென மறைகிறது
இப்போது
இருக்கும் சந்தேகமெல்லாம்
கனவில் வந்த இறந்தவர்கள்
இறந்தவர்களா
அல்லது
நம்மோடு இருந்தவர்களா....!

—

கவிஜி

---

# அழகுச் சிற்பங்களின் நடுவில்

கோரமுகம் காட்டும் சிற்பத்தை
திருஷ்டிப்பொட்டைப் போல
வீசிவிட்டுப் போன
சிற்பியின் மனநிலையில்
என்னை வைத்திருக்கிறது
நமது இறுதிச் சந்திப்பு.
உன் இதயக் கிடங்கில்
நினைவூட்ட வரும்
வறட்சியின் எல்லையில்
நமது சந்திப்புகள் நிகழ்த்திய
அத்தனை தரிசனங்களையும்
புறம் தள்ளிவிட்டு
நகர்ந்து விட முடிகிறது உன்னால்.
எனக்குள்ளேயோ
இன்னும் சுடர் விரிந்து
தடாகத்தில் பூத்திட்ட கமலத்தின்
ஒளியாகவே
காட்சி தருகிறது உனதழகு.

## வந்துபோகும் எண்ணத்தை

சிந்தையில் நிறுத்தாதபோது
ஓடித் திரிந்து
உடனே செய்யும் ஓர் செயலும்
அதையே சுற்றிவட்டமிடுகையில்
அவஸ்தைகள் பெரிதாகி
தூண்டி விடுகிறது
நினைவுகளின் சேகரத்தை.
செய்துவிட்ட வேலையைத் தாண்டி
செய்ய வேண்டுமென்றே
நச்சரிக்கும் மறதியை
எதைக் கொண்டு துறப்பது?

## தினசரி நடைபாதையில்

உதிர்த்திடும் பூக்களோடு
அழகாகி விடுகிறது மரம்.
எப்போதாவது பொழியும் மழையில்
நனைந்து
தன்னையே ஈரத்துக்குள் புதைத்துக்
கொள்கிறது
அம்மரம்.
வயிற்றுப் பாட்டை நகர்த்திட
வந்தமரும் கிழவியின் புலம்பலுக்குள்

நனைந்து அழுகிப் போகிறது
மூடிவைத்திட்ட பழமூடை.
மலரைப் போலவே
கிளையில் ஒட்டிக் கிடக்கும்
ஏதேனுமொரு பறவையை
கவ்விப் போகக் காத்திருக்கும்
பூனைக்கும்
பசியின் தொல்லை பெரிதாகிறது.
காலத்தின் சுழற்சியில்
எனது நடைகளை
நினைவிலிருந்து தொலைத்துவிட்ட
மரத்தின் இருப்பில்
புதிதாகிக் கொள்கின்றன
சாலையின் அடுக்குகள்.

- இளையவன் சிவா,
கைபேசி: 9965359130



# தூரத்தில் வருகிறாய்

என் பக்கத்தில் ஒரு
கவிதைத் தொகுப்பை
அனுப்பி விட்டு.

என் வீட்டின்
முதல் குழந்தை என்கிறாய்
நானோ முதல் கவிதை
என்கிறேன்.

என் வீட்டைக்
கடந்து செல்கிறாய்
என் தூக்கத்தை கலைக்கிறது
உன் கொலுசொலி
அலாரம்.

குடை பிடித்தபடி
செல்கிறாய்
அழகாய் இருக்கிறது
மழை

எனக்கொரு
கவிதை சொல் என்கிறாய்
எதைச் சொல்ல
நான் உனக்கொரு கவிதைத்
தொகுப்பே எழுதியிருக்கிறேன்.

உனக்கு மட்டுமே தெரியும்
அமாவாசையை அழகாய்ச்
சுருக்கி மச்சமாய் வைத்துக் கொள்ள.

பச்சரிசி பல்வரிசையும்
மச்சத்தில் கரும்புள்ளியும்
ஆச்சரியமாகத் தான்
இருந்தது. இரவையும்
பகலையும் ஒரே
இடத்தில் பார்த்தபோது.

உன் வீடே திருப்பதி
வாசலே வைகுண்டம்.
ஜன்னலே சொர்க்கவாசல்.

உன் நினைவு போதும்

ஒரு கவிதையெழுத
நீ அருகிலிருந்தால் போதும்
நினைத்த நேரமெல்லாம்
கவிதைத் தொகுப்பெழுத.

உன்னை வர்ணித்து
ஒன்பது கவிதைத் தொகுப்பு
எழுதியிருக்கிறேன்
நவராத்திரி கொலுவில்
வைக்க.

நீ என்னோடு
பேசாதபோது தான்
சிறந்த கவிதைக்கான
பரிசு கிடைக்கிறது.

நீ பேசினால்
வரிகளை எழுதுவேன்
பேசாத போது தான்
வலிகளை எழுதுகிறேன்.

உன் முகம் பார்க்காமலே
வாடிப்போனது நீ
தலையில் சூடிய
பூ.

—

ஆனந்தன்,
திருப்பூர்.

---

# வேகமாக ஒரு அம்பாசிடர்

செல்வதை உங்களைப்போல
இயல்பாக எங்களால்
கடக்க முடியவில்லை.

துரத்திக் கொண்டும்
பின் தொடர்ந்தும்
ஓடும் எங்களிடம்
ஏனென கேள்வி
கல்லை வீசுகிறீர்கள்.

என்றைக்காவது
அந்த கார்
நின்றுயிருக்கிறதா?
நின்றிருந்தால் எங்களை
ஏனென கேள்வி
கேட்டிருப்பீர்களா?

தொண்டைக்குள்ளே வார்த்தைகள்
உழன்று உச்சுக் கொட்டத்
தொடங்கியிருப்பீர்கள்.

எந்த சக்கரம் அது?
அசோகரின் சக்கரமா?
ஆண்டைகளின் சக்கரமா?
எந்த சக்கரம் அது?

துள்ளி விளையாடும்
எங்கள் பிஞ்சுகளைத்
துள்ளத் துடிக்க
ஏற்றி கொன்றது
எந்த சக்கரம்?

அந்த இரத்த வாடை
ஒவ்வொரு காரின்
சக்கரத்திலும் படிந்திருக்கிறதே
அது எந்த சக்கரம்?

வேகமாக செல்லும் வண்டியைப்
பார்க்கும்போதெல்லாம்
அம்மாவென்று
ஓலங்களாகச் செவியில்
அரைந்துக்கொண்டே இருக்கிறதே
அது எந்த சக்கரம்?

ஒவ்வொரு சக்கரமும்
சுமந்துக்கொண்டு
தானே போகிறது
எங்கள் பிஞ்சுகளின் குரலை.

அந்த காரை ஓட்டியது
நீங்களாக கூட இருக்கலாம்.
வேடிக்கைப் பார்த்து
கண்டுக்காணாமல் போகும்
இந்த சமூகமாகத்தின்
சக்கரமாகவும் இருக்கலாம்.

—

துங்கன்

---

# மூன்று தேவதைகள்

நான் க பேசறேன்..

எங்கள்ல நிறைய பேருக்கு பேர் இருக்காதுன்னு எங்கம்மா சொல்லி இருக்கு… ஆனா எங்கம்மாவுக்கு பேர் வெச்சு எங்களுக்கும் பேர் வெச்சது யாருனு தெரியுமா… இதோ எங்களுக்காக எங்க கதைய எழுதிட்டு இருக்கற எங்க தொப்பிக்காரர்தான்.

தொப்பிக்காரர் நல்லவரா கெட்டவரானு தெரியாது.. எப்பவும் முறைச்சிட்டே தான் திரிவார்.. ஆனா எங்ககிட்ட ரொம்ப அன்பா நடந்துக்குவார். வீட்டை விட்டு வெளிய வந்தார்னா எங்ககிட்ட பேசாம போக மாட்டார். யார் பக்கத்துல இருக்கோமோ அவுங்க தலைய தடவி… சாப்டீங்களாடானு கேட்டுட்டு கொஞ்ச நேரம் எங்களையே பார்த்துட்டு இருப்பார். எப்பவாது சனிக்கிழமை மாதிரி நாள்லதான் கூட சேர்ந்து விளையாடுவார். எங்களுக்கு குஷி ஆகிடும். ஒருத்தர் வாலை ஒருத்தர் புடிச்சு கடிக்கற மாதிரி நடிச்சு கொண்டாட்டத்தை காட்டுவோம்.

நாங்க வயித்துக்குள்ள இருக்கும்போதே எங்கம்மா வயிற தொட்டுத் தொட்டுப் பார்த்து சந்தோசப்படுவாரு. தொப்பிக்காரர் வீட்டுல ஒரு தேவதை இருக்கு.. எங்கள அப்பிடி பார்த்துக்கும். குழந்தைகள கொஞ்சற மாதிரி தான் கொஞ்சும். பாத்து பாத்து சோறு

வைக்கும். பால் வைக்கும். கருவாடு வைக்கும். மீன்காரர் வந்தா நாங்க உடனே வாசல்ல போயி அவரை பார்த்து பார்த்து சத்தம் போடுவோம்.. உடனே வாங்கி குடுத்துரும்.

கூட ஒரு சின்ன பையன் இருப்பான். நாங்க முதல்ல அவனை எங்க கூட்டம்னு தான் நினைச்சோம். அவ்ளோ அமைதியா இருப்பான். தேவதை இல்லாதப்போ அவன் தான் எங்கள பாத்துக்குவான். அவன் அவனுக்கு இருக்கற ஸ்னேக்ஸ் எல்லாம் எங்களுக்கு போட்ருவான். முறுக்கு பிஸ்கட்.. கடலை உருண்டை..சிப்ஸ்.. இப்பிடி எங்களுக்கு குடுக்காம அவன் சாப்பிடவே மாட்டான்.

ரெண்டு பேரும் மாத்தி மாத்தி கவனிப்பாங்க. சில நாள்ல ரெண்டு பேரும் வெளிய போற சூழல்ல தான் எங்க தொப்பிக்காரர் வெளியவே வருவார். அவருக்குள் பால் பாக்கெட் உடைச்சு கூட சரியா ஊத்த தெரியல. ஒருமுறை கீழலாம் கொட்டி தடுமாறி எங்களை பாவமா பார்த்து எப்படியாது குடிச்சிருங்கடானு கெஞ்ச.. நாங்க சிரிச்சிகிட்டே குடிச்சு சுத்தம் செஞ்சுட்டோம். இவர் என்ன தான் பண்ணுவார்னு ஒரு நாள் ஜன்னல் வழியா நுழைஞ்சு பார்த்தோம். அப்புறம் தான் தெரிஞ்சது.. இவர் எழுத்துக்காரர்னு. அப்பப்போ எங்களை பத்தி கவிதை எழுதி படிச்சு காட்டுவார். கேக்க நல்ல இருக்கும். கேட்டுட்டே இருக்கலாம்னு தோணும்.

அப்புறம் தாத்தாவும் பாட்டியும் இருக்காங்க. அவர் தனியா இருக்கும் போது கொஞ்சற மாதிரி பேசுவார். அந்த பாட்டி தான் எங்களை சனியன்னு சொல்லி விரட்டிட்டே இருக்கும். யாரோ எங்களால இன்பெக்சன் வந்திரும்னு ஆழமா விஷத்தை விதைச்சிட்டாங்க. அத அப்பப்போ சொல்லி சொல்லி காட்டி எங்களை மிரட்டி விரட்டும். நாங்களும் சும்மா இல்ல. எப்ப வாய்ப்பு கிடைச்சாலும் வீட்டுக்குள்ள ஓடி ஓடி போவோம். தொப்பிக்காரர் அப்ப கூட எங்கள விரட்ட மாட்டார். நல்லா பேசுவார். அப்டியெல்லாம் பண்ண கூடாது பாய்ஸ்னு மிதமா சொல்லுவார். நின்னு நிமிர்ந்து அவரை பாக்கறதே எங்களுக்கு சூப்பர் பொழுதுபோக்கு. அவர் நிறைய நூல்கள் எல்லாம் படிப்பாருனு எங்கம்மா நண்பர்கள் பேசிக்குவாங்க. எங்களை விளையாட சொல்லிட்டு படிச்சிட்டே தான் இருப்பார்.

அப்பப்போ எங்க படுக்கையை எடுத்துக்கிட்டு எங்க போறாருனு பாப்போம். அப்புறம் தான் தெரிஞ்சது. அது அவரோட பைக்னு. அதுலதான் நாங்க படுத்து இருக்கோம். அதுவும் புது பைக்காம். யாராவது அதுல படுக்க விடுவாங்களா.. ஆனா எங்க தொப்பிக்காரர் விடுவார். அதான் சொல்றோம். அவரை ரொம்ப பிடிக்கும்.

தொப்பிக்காரர் எங்களை டேய்.... வாங்கடா... போங்கடா... சாப்பிடுங்கடா... தூங்குங்கடானு தான் பேசுவார். முதல்ல யாரையோ சொல்றார்னுதான் நினைச்சோம்..

அப்புறம் தான் அது எங்களனு புரிஞ்சுது. சிரிச்சிகிட்டோம். அதுவும் நல்லா தான் இருக்குனு அப்பிடியே ஏத்துக்கிட்டோம். எங்களுக்கு சிரிக்க கத்துக் குடுத்தவரு... தின்பண்டம் என்ன வாங்கிட்டு வந்தாலும் எங்களுக்கு குடுக்காம சாப்பிட மாட்டார்.

க னு கூப்பிட்டா நான் திரும்பறதுக்கு முன்னால என் சிஸ்டர்ஸ் திரும்பிடுவாங்க. அப்புறம் எல்லாருக்கும் அவுங்கவுங்க பேருக்கான வகுப்பெடுக்கப் படும். நாங்கள் நீட்டி நிமிர்ந்து சடவெடுப்பது அவருக்கு ரொம்ப பிடிக்கும். பாத்துட்டேருப்பார்.

எனக்கு ஒரு நாள் உடம்பு சரி இல்லாம போயிடுச்சு. கொஞ்சம் பயந்தது தான் போய்ட்டேன். இன்னும் கொஞ்சம் குட்டியா இருந்த நாட்கள் அது. இவுங்க என்ன பண்ணாங்க தெரியுமா.. என்ன தூக்கி பைக்குள்ள வைச்சு மருத்துவமனைக்கு கொண்டு போய்ட்டாங்க. அங்க போயி மருத்துவர்கிட்ட வலிக்காம ஊசி போடுங்கனு தொப்பிக்காரர் சொல்லிட்டுருக்கார். வலிக்காத ஊசி எங்க இருக்கும்னு... மருத்துவர் சிரிச்சிகிட்டே கேட்டுட்டு நங்குனு ஊசிய குத்தி விட்டுட்டார். அந்த செகண்ட் துள்ளுனேன் பாருங்க ஒரு துள்ளு... ஐயா மிரண்டு போய்ட்டார்.

திரும்ப வரும்போது வலியோட நான் முனகிட்டே வந்தேன். ஆனா தொப்பிக்காரர் என்ன நம்பிக்கை தரும் வகையில் நிறைய பேசினார். என்னை புலி குடும்பம்னு சொல்லி புலி பத்தி நிறைய பேசிட்டே வந்தார். நான் தேவதை மடில அமைதியா உக்காந்து கேட்டுட்டே வந்தேன். நல்ல கைகள்ல இருக்கும் போது பூனை கூட புலியா ஆகிடும். நான் தெம்பா உணர்ந்தேன்.

நாங்க விளையாடிட்டு இருந்தா அவருக்கு ரொம்ப பிடிக்கும். ஒவ்வொருத்தரா தூக்கி தூக்கி தொடைல உக்கார வெச்சுகிட்டு... யோசிச்சிட்டே இருப்பார். தலை தடவி விடுவார். வீட்டுக்குள்ளருந்து அந்தம்மா எங்களை திட்டினா திரும்பி கதவை ஒரு முறை முறைப்பார். எங்களுக்கு சிரிப்பா வந்திரும்.. ஓடி காருக்கடில ஒளிஞ்சுக்குவோம்.

சொல்ல நினைக்கறதுக்கு முன்னாடி சொல்ல மறக்கறதும் இருக்கத்தான் செய்யுது. என்னமோ உளறிட்டு இருக்கேன். தனிமை இப்பிடி என்னை பேச வைக்குது. நைட்டானா தூங்கிட்டோமானு திடீர்னு எங்கள மாதிரியே நடந்து வந்து எட்டி பார்க்கற எங்க தொப்பிக்காரரை அவ்ளோ மிஸ் பண்றேன். இதுல எங்கம்மாவையும் காணோம்.. கூட இருந்த தங்கச்சியையும் காணோம்.. கடைக்குட்டி எங்க கூடயே வரல. என்னாச்சுன்னு தெரியல. காலம் முழுக்க ஒன்னாவே இருப்போம்னு நாங்க சொல்ல முடியாது. ஆனா இன்னும் கொஞ்ச நாள் ஒண்ணா இருந்திருப்போம். அத பிரிச்சிருக்க வேண்டாம்.

என்னடா இவ்ளோ விவரமா பேசறேனு நினைக்காதீங்க. எல்லாமே இப்போ கத்துக்கிட்டது

தான். வீட்டுல இருந்தப்போ கூட இவ்ளோ விவரம் இல்ல. எங்களை பிடிச்சு காட்டுக்குள்ள விட்டாங்கள்ல... அப்பருந்து தான். நேரத்துக்கு சோறு கிடைச்சப்ப யோசிக்க ஒண்ணுமில்ல. இப்ப நேரத்துக்கு சோறு கிடைக்கும்னும் சொல்ல முடியாது. யோசிச்சா அழுகையா வருது.

நாங்க எங்களுக்குள்ள நிறைய அடிதடி போட்டுக்குவோம். ஆனா இந்த அன்பு ரொம்ப கொடூரம். அடிதடிய கூட சமாளிச்சிடலாம். அன்ப சமாளிக்கறது கஷ்டம்.

சோற்றுக்காகவா இருந்தோம். சொந்ததுக்காகதான. இது ஏன் அந்தம்மாவுக்கு புரியாமப் போச்சு. நாங்களும் ஒரு தப்பு பண்ணிட்டோம். வெளியே போயி டாய்லெட் போக இன்னும் பழகாமயே இருந்தோமா.. அதுல வந்தது வினை.

படபடன்னு பைக்குல வந்து இறங்கற தொப்பிக்காரரை எங்கன்னு வந்து பாக்கறது. நான் தேடிக்கூட பாத்தேன். ரோட்டுலே நிறைய வண்டிங்க போகுது.. ஆனா எதுலயும் அவர் இல்ல. ஒரே ஒரு வாழ்க்கைனு அவர் தான் அடிக்கடி சொல்லுவார். அதுல நமக்கு புடிச்சவங்களோட கூட இருக்க முடியாம இருக்கறது எவ்ளோ துயரமானது. அந்த தேவதை எங்க மூணு பேரையும் தூக்கி அப்பிடி கொஞ்சும். அதெல்லாம் இப்ப இல்லனு நினைக்கும் போது நெஞ்சுக்குள்ள என்னவோ பண்ணுது. அந்த பொடியன் பள்ளிக்கூடம் விட்டதும் அவன் பிஸ்கட்டை கொண்டு வந்து எங்களுக்கு குடுப்பான். இப்ப பிக்கட்டும் இல்ல. நட்பும் இல்ல.

பூனை அழுமானு யாராவது கேட்டா இனி உறுதியா சொல்லுங்க. அழும்னு. இதெல்லாம் தாண்டி ஒரு யோசனை எனக்கு வந்துட்டே இருக்கு. நான் உயிரோட தான் இருக்கேனா.. இல்ல அன்னைக்கே செத்து போய்ட்டேனா...

## நான் வி பேசறேன்..

காருக்கடிய நாங்க ஒளிஞ்சிக்கறதுனால காரை எடுக்க தொப்பிக்காரர் படற பாடு இருக்கே... பாவமா இருக்கும். என்ன பண்ணினாலும் எங்க கடைக்குட்டி வெளிய வரவே மாட்டா. குச்சி வெச்சு அடிக்கற மாதிரிலாம் பாவனை செய்வார். ஆனா அடிக்கவே மாட்டார். டயர பரபரன்னு பிராண்டி வைப்போம்.. அப்போ கூட துணி வெச்சு அடிக்கற மாதிரி பாவ்லா காட்டி விரட்டி விடுவாரே தவிர அடிக்கவே மாட்டார். அவரை நான் ரெம்ப மிஸ் பண்றேன். என் கால்கள் வெள்ளையா இருக்கறதுனால.. என்ன வெள்ளை காலானு செல்ல பேர் வெச்சுதான் கூப்பிடுவார். நான் கொஞ்சம் சுட்டி தான். மத்த ரெண்டு பேரை விட வம்பு விலைக்கு வாங்கறது என்னோட பொழுதுபோக்கு. திடீர்னு வாசல்

தாண்டி போற வார வண்டிக்கடியே ஓடிருவேன். அப்ப கூட வண்டிக்காரன நிக்க சொல்லி மெதுவா போங்கனு சொல்லிட்டு... என்ன செல்லமாதான் கோச்சுக்குவார்.

ஏன்டா இப்பிடி பண்றீங்க.. உள்ள வாங்க பாய்ஸ்னு சொல்லும் போது நாங்க எங்கள அறியாம வீட்டுக்குள்ள ஓடி வந்திருவோம். எங்க வீக்னஸ் கருவாடுனு தெரிஞ்சுக்கிட்டார். அதனால காரை எடுக்கும் போது அந்த பொடியன்கிட்ட சொல்லி எங்களுக்கு கருவாடு வைக்க சொல்லுவார். கருவாடு வாசம் புடிச்ச அடுத்த செக்கண் நாங்க எங்கிருந்தாலும் தெறிச்சு சாப்பாட்டு பாத்திரம் பக்கம் வந்துருவோம். அந்த கேப்ல காரை எடுத்துக்கிட்டு போயிடுவார். நாங்க அடில இருக்கமா... எங்க இருக்கோம்னு உறுதி பண்ணிக்கிட்டு தான் வண்டிய எடுப்பார். அவ்ளோ கவனமா எங்களை பாத்துக்குவார். இப்போ நான் எதோ காட்டுக்குள்ள இருக்கேன். க... எங்க போனானு தெரியல. சாப்பிடறதுக்கு எப்பிடியும் எலியர்கள் கிடைச்சிடுவாங்க. என்ன இந்த மழை தான். அதுவும் தண்ணினாவே எங்களுக்கு ஆகாது. இதுல மழை நாள்ல கொண்டு வந்து இப்பிடி காட்டுக்குள்ள வீசிட்டு போவாங்கனு நினைக்கவே இல்ல. க கூட தான் இருந்தா. அவளும் பாவம் தடுமாறி போய்ட்டா. இப்ப நான் அவள தேடறதா... நான் எங்கருக்கேனு தெரிஞ்சுக்கறதா... வீடு எவ்ள தூரம்னு யோசிக்கறதா.. திரும்பி வந்து எங்கம்மாவையும் அவரையும் பாப்பேனா... தொப்பிக்காரர்... அந்த பொடியன்.. அந்த தேவதைக்கா... இவுங்கெல்லாரையும் மறுபடியும் எப்பிடி பாப்பேனு தெரியலயே. பயமா இருக்கு.

தொப்பிக்காரர் மட்டும் இருந்திருந்தா எங்களை விட்டிருக்கவே மாட்டார். பாவம் அந்த தேவதைக்காவும்.. பொடியனும்.. கண்ணு கலங்க பாத்துட்டே இருந்தாங்க. எங்களுக்கு பயம். திடீர்னு முரட்டு கை வந்து எங்களை தேடி தேடி புடிக்குதேன்னு. அப்போதான் புரிஞ்சுது. எங்களை காடு கடத்த போறாங்கன்னு. நானும் க வும் மாட்டிகிட்டோம். அவர் தப்பிச்சு எங்கயோ போயி ஒளிஞ்சுக்கிட்டா. ஆனா அவருக்கு இன்னும் அங்கதான் இருக்காளா இல்ல அவளையும் எங்கயாவது கொண்டு போயி விட்டுட்டாங்களானு தெரியல.

எங்களுக்காவது கொஞ்சம் விவரம் இருக்கு... அவருக்கு அவ்ளோ விவரம் போதாது. நாங்க என்ன பண்றோமோ அத தான் பின் தொடர்வா.. இப்போ என்ன பண்றாளோ. எங்கம்மா எங்களை தேடுமான்னு தெரியல. இந்த க வேற காணோம். அவளதான் காலைலருந்து தேடிட்டு இருக்கேன்... எங்க போனானு தெரியல. நாய்ங்க கிட்ட மாட்டிகிட்டாளா... வண்டில குறுக்க ஓடிட்டாளா... யோசிக்க யோசிக்க அழுகையா வருது. எல்லாமே கனவு மாதிரி படபடன்னு நடந்து முடிஞ்சிடுச்சு.. பக்கத்துல எங்கயாவது கொண்டு விட்டுருந்தா கூட எங்கம்மாவை பார்க்க... ஜி ய பார்க்க வாய்ப்பு இருந்திருக்கும். ஏன் இவ்ளோ தூரம் வண்டில கூட்டிட்டு வந்து இப்பிடி தூக்கி போடணும். அதும் அந்த முரட்டு கை பிரிச்சும் பிரிக்காம அந்த பையோட எங்களை தூக்கி போட்டுட்டு போய்டுச்சு. தட்டு தடுமாறிதான் வெளிய வந்தோம்.

ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு அப்புறம் எல்லாரும் எல்லாரையும் விட்டு பிரியறது தான் வாழ்க்கைனு தொப்பிக்காரர் அடிக்கடி சொல்வார். ஆனா அது புரியறதுக்கு முன்னாடியே பிரிஞ்சதுதான் சிரமம். மத்தபடி யார் மேலயும் கோவம்லாம் இல்ல. நாங்க எல்லாத்தையும் சீக்கிரம் மறந்துருவோம். எங்களையே மறந்து புது ஆளா தெரியற எங்களையெல்லாம் ஒரு கணக்குல வச்சுக்கிட்டு வீடு கடத்தி காட்டுக்குள்ள விடறதுலாம் இனி வேண்டாமே. நாங்களா வந்தோம்... நாங்களா போயிடுவோம். இடைல எங்கள வெச்சு நீங்க வில்லன் ஆக வேண்டாம். தொப்பிக்கார் மாதிரி எங்க மேல அன்பு வெச்சு... அதுனால அவரும் சிரமப்பட வேண்டாம்.

இந்த பூமில ஒரு உயிரா பொறக்கறது எவ்ளோ அற்புதம். அதுவும் உறவுகளோடு நண்பர்களோடு சேர்ந்து வளர்றது இருக்குல... அதுலதான் வாழறதோட மொத்த அர்த்தமும் இருக்குனு தொப்பிக்காரர் சொல்லிட்டே இருப்பார். இப்ப அத உணர்றேன். அப்படி ஒரு உறவை தவற விட்டுவிட்டேன். நாங்க எங்க தவறவிட்டோம். எங்களை தான் காணாம பண்ணிட்டாங்களே. நான் ரெண்டாவதா இருந்தாலும் கொஞ்சம் விவரமா இருப்பேன். க கொஞ்சம் நோஞ்சான். அடிக்கடி உடம்பு சரி இல்லாம போய்டும். என்ன ஆனானு தெரியல. நாங்க ரெண்டு நாள் ஒண்ணா இருந்தோம். அப்புறம் வழி மாறிட்டோம். இது எந்த இடம்.. எங்க இருக்குனு ஒன்னும் புரியல. அன்னைக்கு மழை வேற நசநசனு பெஞ்சுகிட்டே இருந்துச்சா.. அது நிஜமாகவே மரண பயம் தான். அழுகை அழுகையா வந்துச்சு. ஒரு கூட்டு குடும்பத்துல இருந்து உங்கள பிரிச்சுக் கொண்டு போயி சிறைல தள்ளினா எப்பிடி இருக்கும். அப்பிடித்தான் இருந்துச்சு. நாங்க ஒருத்தர் மேல ஒருத்தர் முட்டிகிட்டு சாய்ஞ்சு தான் தூங்குவோம். இப்போ நான் எங்க போயி தூங்க. யார் மேல சாஞ்சுக்க. எங்க குடும்பத்தை இப்பிடி பிரிச்சிருக்க வேண்டாம். நாங்க எல்லாரும் ஒண்ணா தூங்கற ஒரு போட்டோ கூட இருக்கு. அதெல்லாம் இனி வெறும் நினைவு தானா.

நீயும் தான் எலிய திங்கறன்னு கேட்டா... என்ன சொல்றது.. நீங்களும் தான் ஆடு மாடு கோழின்னு திங்கறீங்கனு திருப்பி கேட்க தொப்பிக்காரர் கத்து குடுத்துருக்கார். ஆனா நான் கேட்க மாட்டேன். நீங்கல்லாம் ஆறறிவு உள்ளவங்க. நாங்க வெறும் அஞ்சறிவு தான். எங்க எல்லை எனக்கு தெரியும். அதையும் அவர் தான் கத்துக் குடுத்துருக்கார். அவர் கூட கொஞ்ச நாள் இருந்துட்டோமா.. அதான் உள்ளுணர்வு வேலை செய்ய ஆரம்பிக்குது போல. இப்பிடி புலம்பி தள்றேன். எங்க இருக்கேனு தெரிஞ்சதுனா எங்க இருக்கேனு தேட ஒரு யோசனை கிடைக்கும். எதுவுமே தெரியலயா. நான் மட்டும் உயிரோட இருந்து அவங்க இல்லனா அத என்னால எப்படி தாங்க முடியும் சொல்லுங்க... இல்ல அவுங்க உயிரோட இருந்து நான் செத்துருந்தா அது அவங்களுக்கு தெரியாமயே போய்டுமே.

மனிதர்கள் பிரிஞ்சா முகநூல் வழியா கண்டுபிடிச்சிடலாம்.. பூனைங்க தொலைஞ்சா எந்த

நூல் வழியாவும் கண்டுபிடிக்க முடியாது இல்லையா. பசியும் அழுகையும் ஒண்ணா வந்தா என்ன பண்றது... இப்போ வருது..

## நான் ஐயா பேசறேன்..

பெத்த புள்ளைய குப்பைத் தொட்டில போடறதுக்கும்.. பெத்தவங்கள கொண்டு போயி எங்கயாவது விட்டுட்டு வர்றதுக்கும் சமமான செயலத்தான் இப்ப பண்ணிருக்காங்கனு தொப்பிக்காரர் பேசுறது எனக்கு கேட்டுச்சு. ஆனாலும் எனக்கு காய்ச்சல் வந்துருச்சு. கூடவே இருந்த க வையும் காணோம் வி யையும் காணோம்னா பயம் வராதா.

யார பார்த்தாலும் பயம் பயமா வருது. அதுவும் அந்தம்மாவ பாத்தா மரண பயம். ஆனா அந்தம்மா டக்குனு என் மேல பாவம் பாக்க ஆரம்பிச்சிடுச்சு. சில நேரம் சோறு வைக்கும். சில நேரம் வைக்காது. அதெல்லாம் இப்ப பிரச்சனை இல்ல. மறுபடியும் கொண்டு போயி என்ன தொலைச்சிடுவாங்களோனு தான் பயமா இருக்கு. தொப்பிக்காரர் கடுங்கோவத்துல இருக்கார். எங்களுக்கு இப்பிடி நடந்ததுல அவருக்கு பயங்கர டென்ஷன். அவர் அவ்ளோ சீக்கிரம் யாரு மேலயும் அன்பு வைக்க மாட்டாராம். வெச்சிட்டா... அது காலத்துக்கும் மாறாதாம். அந்த தேவதைக்கா சொல்லிட்டு இருந்தாங்க. அந்தக் கண்ணாடி அண்ணன் ரொம்ப நல்லவன். என்ன பார்த்து பார்த்து சோகமா பாத்துட்டே இருப்பான். தூக்கம் வராம நான் படற சிரமம் பூனைகளின் மறுபக்கம்னு ஒரு நாவலே எழுதலாம். அவ்ளோ வலி நிறைந்த பக்கங்கள். எங்க அம்மாவும் இப்ப இங்க வர்றது இல்ல. வைரமுத்து ஒரு கவிதை எழுதினாராம்... நான் இல்லனா உனக்கு வேற புள்ள இருக்கு... எனக்கு நீ இல்லனா வேற அம்மா இருக்கானு. தொப்பிக்காரர் சொல்லி சொல்லி வருத்தப்பட்டார். அவருக்கு என்னையும் இழந்திர கூடாதுனு பயம். முன்ன மாதிரி அவர் கோபப்படறது இல்லையாம். இல்லனா வீட்டை ரெண்டாக்கிடுவேன்னு சொல்லி என் தலைய தடவிட்டே இருப்பார்.

பாவம் க வும் வி யும் எங்க இருக்காங்களோ... என்ன பண்ணறாங்களோனு அவ்ளோ வருத்தம் இருக்கு. அவர் வருத்தப்படறத பாத்தா எனக்கும் வருத்தம் ஆகிடும். எங்களை ஏன் பிரிக்கணும்.. நானாவது அதே வீட்டுல நேரத்துக்கு சோறு கிடைச்சு தங்க இடம் கிடைச்சு இருக்கேன். க வும் வி யும் என்ன பண்ணுவாங்க. நாங்க திரும்ப பாத்துக்கவே முடியாதா... அவுங்க ரெண்டு பேரும் எப்பவாது என்ன தேடி வருவாங்களா... எனக்கு ஒரு வழியும் தெரிய மாட்டேங்குது... யார பார்த்தாலும் பயமா இருக்கு... நான் தான் சின்னவங்கறது-னால எனக்கு பயம் போல. நான் பெருசாகிட்டா பயம் போய்டும். அப்புறம் நானே இங்கிருந்து போய்டுவேன். தேவதைம்மாவுக்கும் கண்ணாடி அண்ணனுக்கும் என்னால திட்டு விழுந்துட்டே இருக்கு. தொப்பிக்காரர் பாவம் என்ன பண்றதுனே புரியாம என்னை பாத்துட்டே இருக்காரு.

என்ன நாங்க மூனு பேரும் இனி சந்திச்சிக்கவே முடியாது. எங்கம்மா அடுத்த குட்டிகளை பெத்துக்க பக்கத்து வீட்டுக்கு போய்ட்டா. எனக்கு ஆதரவுனா இப்போ தொப்பிக்கார் குடும்பம் தான். நான் உறுதி எடுத்துக்கிட்டேன். இப்பெல்லாம் டாய்லெட் வெளிய தான் போறேன். மண்ணு போட்டு மூட கொஞ்சம் கொஞ்சமா பழகிக்கறேன். எலி புடிக்கவும் பழகிட்டேன். மதில் ஏறி இறங்க தெரியும். அப்புறம் என்ன. கொஞ்ச நாள் இங்க இருந்துக்கறேன். அதுவும் இந்த தொப்பிக்கார் பொக்குனு போய்டுவார்னு தான். அவருக்கு உறுதுணையா இருக்க நினைச்சிருக்கேன். என்ன தான் பெரிய மனுசி மாதிரி பேசினாலும் க வும் வி யும் என்ன ஆனாங்களோனு நினைக்கும் போது கண்ண மூடிக்குவேன். நினைச்ச நேரம் தூங்கறேன்னு உங்க உலகம் நினைக்கும். ஆனா எங்க உலகத்துல அதுக்கு துக்கம்னு பேர் இருக்கலாம்தான.

ஆறாம் வகுப்பில தொப்பிக்காரரை இப்பிடித்தான் கொண்டு போயி விடுதியில் விட்டுட்டாங்களாம்.. சொல்லி சொல்லி என்னைத் தடவிக் குடுத்துட்டே இருப்பார். அவர் பாவம் அடுத்த நாள் போயி காடெல்லாம் தேடிட்டு தான் வந்திருக்கார். காணோமேனு சொல்லிட்டு என்னையே பார்த்தார். நானும் அவர் கண்ண பாக்க முடியாம தவிச்சேன். பிரிவு மனுசங்ககுள்ள மட்டுமா என்ன. எங்கள மாதிரி உயிர்களுக்கும் பிரிவு... வலி குடுக்கற ஒன்னு தான். கொஞ்சம் குறும்பு பண்ணத்தான் செய்யறோம். சாளரதுக்குள்ள புகுந்துக்கறது... சட்டிய உருட்டறது... திருட்டு இயல்பா இருக்கு. என்ன செய்ய எங்க வடிவம் அப்பிடி. அதுக்காக வாழ்வே தகுதி இல்லங்கற மாதிரி கையாள்வதும்.. சோறு தரீங்கங்கறதுனால எங்க வாழ்க்கைய நீங்களா முடிவு பண்ணி எங்களை பிரிக்கறதெல்லாம் சக உயிர கேவலப்படுத்தறதுக்கு சமம்.

குறை சொல்லணும்னு எதுவும் சொல்லல. பாரம் குறையுமேனு தான் பகிர்ந்துகிட்டேன். பாருங்க எங்க தொப்பிக்காரர் எழுத எழுதவே கண்ணு கலங்கறார். அவர் இயல்பா ஆகணும்... அதுக்காகவாவது நான் தொலைஞ்சிடாம இருக்கனும்...

## நான் கவிஜி பேசறேன்..

நடக்க கூடாது என்று நினைத்தவைகளை நடக்க விடும் நாள் ஒன்று என்னை தேர்ந்தெடுத்து தூர தேசம் அழைக்கையில் நான் போனது எனது தவறாகவே இருந்திருக்க வேண்டும். இல்லையெனில் அதற்கான தண்டனையை நான் ஏன் அனுபவிக்க வேண்டும். மனம் முழுக்க க வும் வி யும் துள்ளிக்கொண்டு இருக்க கண்களில் அவர் அமைதியாக அமர்ந்திருப்பது காற்றை மறுக்கும் சுவாசத்தின் புத்தியல்பாக இருக்கிறது. மிக கவனமாக கோபங்களை மறைந்து நின்றே கவனிக்கும் பூனை பாவனைகளில் நான்   இல்லாத மதில்

மேல் இருளுக்குள் நடந்து கொண்டிருப்பது கண்டிப்பாக உங்கள் கண்களில் விழ வேண்டும் என்பதற்காக அல்ல. அதன் முடிவிலி என்னவென்று தெரியவே இந்த ஒப்பாரி. ஓங்காரம். அழுகை. அரட்டல்.. விசும்பல்.. விரக்தி.

—

*கவிஜி*

---

# செய்வதைச் சீருடன் செம்மையாய்ச் செய்கவே

## *பா வகை:*

வண்ண ஒத்தாழிசைக் கலிப்பா.

## *தரவு:*

செயல்களினால் என்றென்றும்
செம்மையென வாழ்ந்திடுவோம்
பயனென்றே வாழ்வுதனை பாங்குடனே
வாழ்ந்திடுவோம்
முயற்சியிலே நம்வாழ்வை
முழுமையெனக் கொண்டிடுவோம்
உயர்வென்றே சிந்தையினை உலகறியச்
செய்திடுவோம்.

## *தாழிசை:*

1)அறவழியில் செயல்களையும்
அன்புடனே செய்திடுவோம்
மறவத்தை நம் நெஞ்சில்
மாண்புடனே கொண்டிடுவோம்
இறவாத மாந்தத்தை
இயல்புடனே காத்திருந்தோம்
உறவாக யாவரையும் உரிமையினைக்
கொண்டிடுவோம்.

2)
நயன்மையினை எந்நாளும்
நம்வாழ்வில் கொண்டிடுவோம்.
வியப்புடனே எந்நாளும் விடியலினைக்
கண்டிடுவோம்
மயங்காத வாழ்வுதனில் மண்ணுலகை
வென்றிடுவோம்.
உயர்ந்தோர்கள் வழியினிலே
உண்மையினைக் காத்திடுவோம்.

3)
உலகத்தில் எச்செயலும்
உயர்வுடனே செய்திடுவோம்
நிலத்தினிலே என்றென்றும்
நிலையென்றே வாழ்ந்திடுவோம்
நிலவொளியின் அழகாக நிலத்தினிலே
ஒளிர்ந்திடுவோம்
குலமோங்கிச் சிறந்திடவே குணத்தினிலே
ஓங்கிடுவோம்.

## வண்ணகம்:

இயன்றதை என்றுமே
இனிமையாய்ச் செய்வோம்.
நயத்திலே என்றுமே நல்லதே எங்குமே
பயனிலா வாழ்விலே பாங்கென

இல்லையே
உயர்ந்திடும் செயலினை உணர்ந்திட
நன்மையே
வயலுமே மழையினால் வளமென
மாறுமே
இயற்கையைக் காத்திட இனிமையாய்
உலகமே
முயற்சியை வாழ்விலே முழுமையாய்க்
கொள்கவே
முயன்றிட வாழ்க்கையும் முதலென
மாறுமே!

## அம்போதரங்கம்:

நலமென்றே வாழ்ந்திட   நன்மையே
விளைந்திடும்
உலகிலே ஒழுக்கமே உயர்வென ஆகிடும்
புலனையும் காக்கவே புவியினை
வெல்லலாம்
நிலத்திலே யாவரும் நிலையென
இல்லையே

## அளவெண்:

இன்பமே ஓங்கிட இயல்பென வாழ்கவே
பன்முகம் கொண்டிட பாக்கெட் ஆகுமே
உன்திறன் ஓங்கிட உன்புகழ் ஓங்குமே
நன்னெறி வாழ்வினில் நன்மையே
நாளுமே!

## இடையெண்:

அன்பினில் என்றும் அனைத்துமே
கன்னலாய் மாறிடும் காலமே
நன்மையாய் மாறிடும் நாளுமே
வன்மமும் நீங்கிட வாழ்க்கையே
தன்னலம் நீக்கவே தலைமையே
தன்னிலை அழித்திடும் தருக்குமே
பன்முகம் ஓங்கிடும் பாரிலே
நன்னெறி சிறக்கும் நாட்டிலே!

## சிற்றெண்:

நிலையென்றே இருந்திடுவோம்
நெஞ்சினிலே மகிழ்ந்திடுவோம்

நிலையறிந்தே வாழ்ந்திடுவோம்
நிலவென்றே ஒளிர்ந்திடுவோம்

நிறைவென்றே ஏற்றிடுவோம்
நெஞ்சமதை மாற்றிடுவோம்

குறைவின்றி வாழந்திடுவோம்
குன்றென்றே நின்றிடுவோம்

செயலினிலே வென்றிடுவோம்
செயல்வழியே ஒன்றிடுவோம்.

அறத்தினையும் காத்திடுவோம்
அழகென்றே வாழ்ந்திடுவோம்

மறவத்தைக் கொண்டிடுவோம்
மாண்புடனே வென்றிடுவோம்

பயனென்றே வாழ்ந்திடுவோம்
பண்புடனே சிறந்திடுவோம்

## தனிச்சொல்:

ஆகையால்

சுரிதகம்:

செயலினைச் சீரெனச் செய்தால் சிறப்பு
உயர்ந்த மனத்திலே உண்மையும் ஓங்கும்
வியக்கும் வகையில் வெளிச்சம் இருக்கும்
மயக்கும் உலகினில் மாண்பே பெரிதே!

வாழ்வியல் கவி,
(சா. நாகூர் பிச்சை)
துபாய்.



---

# பேச்சும் தமிழும்

மேடைல ஏறுனா
ஆறு போல பேச்சு
செயலுன்னு வந்துட்டா
அத்தனையும் போச்சு

பழமொழிச் செடியிங்க
பட்டே போச்சு
சொலவடை எல்லாம்
செத்தொழிஞ்சுப் போச்சு

ஆறுல நீரும்
வத்திப் போச்சு
அரசியல் பேச்சும்
ஆறிப் போச்சு

## எண்கள சரியாச்சொல்ல

எத்துப்பல்லும் இடிக்குது
திருக்குறளப் பேசவும்
திக்கித்தான் தெணறுது

சைவம் வைணவமுன்னு
சகட்டுமேனிக்குப் பேசுது
ஒசி ஒசின்னு
ஒளறிக் கொட்டுது

கம்பராமாயணத்த தந்தவன்
சேக்கிழாருன்னு செப்புது
தமிழகத்து வரலாறத்
தலகீழாத் திரிக்குது

தலைவர்கள் நாக்குலதான்
தகிடுதத்தம் ஆடுது
தமிழ்நாடு தலையெழுத்து
இவங்களால இயங்குது

சாலைகள்ல இருக்குற
சாதிகள வெட்டுது
பாலத்துக்கு நாயுடுவ
பளபளப்பா ஒட்டுது

ஒத்தயான நாக்குவச்சு
ரெட்டத்தனமாப் பேசுது
அரசியல்ல முழுசா
அரிதாரத்தப் பூசுது

## வீட்டுக்குள்ள வேற மொழி

விசுவரூபம் எடுக்குது
பொதுவெளில வந்துட்டாக்க
தமிழுன்னு உருட்டுது

ஆங்கிலத்துல பேசுறத

நாகரிகம் ஆக்குது
தமிழுல பல சொல்ல
தகாததா மாத்துது

ஆங்கிலமும் தமிழுக்குள்ள
ஆலமரமா வளருது
சீக்கிரமா எந்தமிழ
சிறுபான்மை ஆக்குது

பதுங்குகுழிய ஆங்கிலமும்
பதம்பதமா வெட்டுது
பாதாளத்த அதுல தேடி
பழந்தமிழ செதைக்குது

தமிழுன்னு சொன்னாலே
இளசுகளும் மொறைக்குது
தங்கத்த வைரத்த
தகரமா நெனைக்குது

எஞ்சாமித் தமிழுக்கு
என்னென்னவோ நடக்குது
ஏதொன்னும் தெரியாம
எம்மினமோ உறங்குது

—

மதுரகவி,
வண்டியூர்,
மதுரை.

---

# வசதி வரமல்ல ஏழ்மை சாபமல்ல

வரவின் செல்வம்
வரமும் அல்ல...
வன்மமாய் வந்தால்
வலிகள் மெல்ல....

பொன்னில் ஆசையில்
பொங்கினால் தீமையே..
பொற்கரங்களினால் கொடுக்கும்
பொற்கிளியும் மேன்மையே...

வறுமையில் முகிழ்ந்தே
வாடினால் சிலுவையல்ல....
வாழ்வில் உழைப்பை
வாசித்தால் பிழையேயல்ல...

அன்பில் நெகிழ்ந்தே
அள்ளிக் கொடுப்பதின்
அருமை உணரும்
அருளுடையாரும் இங்கே...

நல்வழியில் தேடும்
நற்செல்வம் நன்றே..
நாளும் பொழுதும்
நாடுவோம் முயற்சினையே...

—

கவிமணி
இரஜகை நிலவன்,
மும்பை.

# வெற்றியைத் தவற விட்டவன்

மொட்டு
தன்னுடலையே
உடைக்கிறது பூவாக...!
/

நான் மரமானபோது
இதயம் வேர்களானது.
குருதி நீரானது.
/

மரங்களை வரைந்த தூரிகை
தற்போது நனைகிறது
மழையில்.
/

உன்னை மறந்து
என்னையே நினைத்திருப்பாய்
என -
என்னை மறந்து
உன்னையே நினைத்திருக்கிறேன்.
/

ரோஜாவை ரசிக்கிறாய்
ரசிக்கக் கூடியதுதான்
ரோஜாவின் அழகு.
உன் ரசனைக்கேற்ப ரசி
தவறில்லை.
உன் பார்வையில் முட்கள்
வந்தமரும் காலம்
பொலிவிழந்து வாசமிழந்து
சருகாகியிருக்கும்
ரோஜா...!
/

எல்லோரும்
சொந்தம் கொண்டாடும்
நதியை
நானும் கடக்கிறேன்.
அன்னியமின்றி
எனக்கும் சொந்தமானது
நதி.
/

பார்க்கத் தெரிந்த
முகமாய்த் தெரிகிறது.
இனிய காலை வேளையில்
ஒரு வணக்கத்தைத் தந்து
இலவசமாய்
ஒரு புன்னகையையும்
தருகிறார்
/

பறவையைக் குறிபார்த்து
எறிந்த வேட்டைக்காரனின்
கவண் கல்லைவிடவும்
உயரத்திலிருந்த
பறவையின் எச்சம்
வேகமாய் தரைதட்டியது
உயிர்ப்பயத்தில்...!
/

மழை நின்று
வெகுநேரமாகியும்
மரத்தடியில் நின்றபாடில்லை!
/

பலிஆடும் பக்தனும்
ஒன்றாய் வேண்டிட
பக்தனுக்கே அருளினார் கடவுள்.
/

எனக்குத் தெரியாமலே
சிதறிக் கிடக்கிறேன் நான்.
என்னை மொத்தமாய்க்
கூட்டி எடுக்கிறாள்
பார்வையால் ஒருத்தி.
/

நாடிவரும்
பறவைகளுக்கெல்லாம்
தாயாகிறது மரங்கள்.
/

பிடிக்க ஆயிரம் இருந்தும்
பிடிக்காமல் போக காரணம்
ஒன்று போதும்.
/

நான் வெற்றியைத்
தவறவிட்டவன் என்கிறேன்
நீங்கள் தோற்றவன்
என்கிறீர்கள் என்னை.

- பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353



---

## அதை விட...

மீண்டும்
மீண்டும்
முயற்சி செய்து
பெற்ற வெற்றியில்
கிடைத்த மகிழ்வை விட

நீண்ட நாட்களாய்
நாளை நாளை
என்று எதிர்பார்த்த
பதட்ட நிமிடங்கள்
கடந்த கணத்திற்கு
பிறகு
கிடைக்கும் மகிழ்ச்சியை விட

'அப்பாடா'
என்ற தன் மன நிறைவு
அதிகம்

## பேரை சொல்லவா?...

உலகத்து நல்ல விடயங்களும்
பிறரை பாராட்டும்
நிகழ்வுகளும்
பகிரப்பட்டால்
அது 'மகிழ்வான மன நிலை'

நாட்டின் அவலங்களும்
பிறரை குற்றம் சாட்டுதலும்
அரங்கேறினால்
அது 'வருத்த மன நிலை'

மகிழ்ச்சியும்
நம்பிக்கையும்
சொல்லப்பட்டால்
அது 'வெற்றியின் வாசிப்பு'

புலம்பல்களும்
இயலாத தன்மையையும்
சொல்லப்பட்டால்
அது'இழந்த மன நிலை'..

## மனிதமாய்...

வேண்டுவன கிடைக்க
விரும்பாதது நடக்காமைக்கு
நம்பிக்கைக்கு பயவிலகலுக்கு
செல்வத்துக்கு செல்வாக்குக்கு
புகழுக்கு அங்கீகாரத்துக்கு
நீண்டு கொண்டே
போகின்ற பிரார்த்தனைக்கிடையே
யாரோவான மரணச்செய்தி
செவிக்கு செல்கையில்
அத்தனையும் சற்றே
தற்காலிகமாய் ஓரம்கட்டி
உடனடியாய்
ஆத்மா சாந்திக்கு
வழிபாடாய்
மனிதத்தால

## இவரால்...

நெடிய நட்பிருந்தும்
பகிர ஆயிரமிருந்தும்
அருகருகே இருந்தும்
ஊமையாகி
அவரவர் அலைபேசியை
பார்த்தபடி...

## அந்த நிலை வரும் வரையில்...

செல்வ சேமிப்பில்
போக வேண்டிய
தூரம் இருப்பினும்
கிடைத்தவற்றில் சந்தோஷமமும்
நாளையவற்றில்
நம்பிக்கை

முடிக்க வேண்டிய
பணிக்கு
நிறைய பயணம்
செய்ய வேண்டிய
இருப்பினும்
முடிந்தவற்றில்
தன் மன நிறைவும்
செய்ய வேண்டியவற்றில்
ஆர்வம்

சிரமங்கள் தீர
பல நிலை கடக்க
வேண்டியவை இருப்பினும்
தீர்ந்த சிரமத்திற்கு
நிம்மதியும்
பாக்கி உள்ளவை
தீர செயல்பாடு

அந்த நிலை வரும்
வரையில்

மனதுக்குள்
தொண தொணப்பு
இருந்து கொண்டே
தான் இருக்கும்

## ஞாபக சேமிப்பிலிருந்து...

சிறு வயதில்
பொழுது போக்குக்கு
திரைப்படமே
பெரும் பங்கு வகித்த
நாட்களில்

படம் பார்ப்பதற்கு
முன்பு அதை பற்றிய
கற்பனை

நண்பர்களுடன்
சேர்ந்து சென்ற
மகிழ்ச்சி

திரையரங்கில்
ஏற்கனவே உள்ள
நண்பர்களுடன்
சேர்ந்து கொண்ட
பிற நண்பர்களுடன்
அரட்டை

கொஞ்சம் வளர்ந்த பின்
புத்தி யோசிக்க ஆரம்பித்த பின்
திரை காட்சிகளுக்கான
வசனத்தை முன் கூட்டி
சொல்லி
நம்மை நாமே

சபாஷ் சொல்லிக்கொண்ட
தருணங்கள்

அடுத்த கட்டமாய்
தர்க்க ரீதியாய்
காட்சிகள் கோர்வையாய்
வரவில்லை
வசனத்தில் இன்னும்
வலு சேர்த்திருக்கலாம்
முடிவு வேறு விதமாய்
இருத்திருக்கலாம்
என திரை விமர்சனகாய்

அது ஒரு சந்தை
அங்கு உள்ள தேவைக்கு
தான் தயாரிப்பு
அதற்குத்தான் வியாபாரம்
என்பது புரியாமால்

பின் ஒரு கட்டத்தில்
மனததோடு ஒட்டா
படம் எனில்
பாதிலியே
திரையரங்கம் விட்டு
வெளியேறல்

தற்போது
இரண்டு மணி நேரம்
பார்க்க பொறுமை
இல்லாமை
இணைய வழி
பொழுது போக்கு
என்று ஆகி விட்டதால்
திரைப்படம்
பார்த்தே

பல ஆண்டுகள்
ஆகி விட்டது.

## அன்றைய நாட்களில்...

சொந்த மண்ணின்
மங்கல நிகழ்வுகள்
ஆலய விழாக்கள்
ஊர் திருவிழா
பொது நிகழ்வுகள்
துக்கச்செய்தி

தேர்தல் முடிவு மாதிரி
உடனுக்குடன் அறிந்த
காலம் போய்

சுவரொட்டியிலும்
செவி வழியாய்
செய்தியாயும்

வார விடுமுறையில்
இல்லம் வந்து
மெதுவான நடைபயிற்சியின்
போது..

## எதில் ?

ஆரம்பிக்கும் போதே
சாதகமாது என்பதா

நம்பிக்கையான
முடிவு தப்பும் போது

செயல் பயணத்தின்
இடையில் நடக்காது

என அறிவது

இந்த மூன்றிலும்
தோல்வி தான்
இழப்பு தான்
சோகம் தான்

ஆனால் மூன்றில்

முதலாவதில் ஏற்கனவே
அறிந்தது

மூன்றாவதில்
பின்னர் தெரிவது

இரண்டாமதில்
நிகழும் கணத்தில்
அறிவது

அதில் தான்
வருத்தம் அதிகம்

சரி தானே?

## ஒவ்வொன்றுக்குள்ளும்...

செய் தொழிலில்
சரியோ தவறவோனக்கான
மனதை தகர்க்கும்
வசை பாடலில்
காட்டப்படும்
பொறுமையில்
பொருளாதாரம்
சார்ந்த சிந்தனை

தவறோ சரியோவுக்கான

புரிதலில்
நட்பும் உறவும்
வாசிக்கும்
குற்றப்பத்திரிகையின் போது
காட்டபடும்
அமைதியில்
மனக்கஷ்டம் வராமால்
தொடர நினைக்கும்
மனப்பக்குவம்

தன் கீழ் உள்ளவர்
செய்த தவறால்
இல்லை செய்யாத
பணிக்கு
தான் கேள்வியாகும்
கை காட்டாமால்
இருத்தலுக்கு
அவரின் எதிர்காலம்
நாமும் தானே
பொறுப்பு என்ற எண்ணம்

மாற்றுக்கருத்து
இருந்தும்
பொது விவாதத்தில்
பதிலற்று இருப்பது போல்
இருப்பது
பேசு பொருளை விட
பேசுபவர் முக்கியம்
என்ற சிந்தனை.

## வெளிப்படுத்தும்...

முடிவுகளுக்கான
கேள்வியில்
உடனடியாய் சொன்னால்
உணர்வு ரிதியாகி விடுமோ என்ற
பயத்தாலும்

நிதாமானயாய்
யோசித்து சொல்ல வேண்டும்
என்ற நிலைப்பட்டாலும்

நடந்தவைகள்
சாதகமாய் இல்லை என்றாலும்

நடக்கப்போவது
நன்மை அளிக்கும்
என்ற நம்பிக்கை
உணர்வை
வெளிப்படுத்தும்
வார்த்தை தான்
'பார்க்கலாம்'...

## அந்த பொழுதுகளை...

வேண்டும் என
ஏக்கம் கொண்ட

கிடைக்க திறன்
வளர்த்து கொண்ட

துல்லியமாய்
திட்டமிட்ட

செயலாக்கத்தில்
உழைப்பையும் திறமையும்
காண்பித்த

முடிவுக்கான காத்திருந்த
கணங்களில் பொறுமை கொண்ட

நிகழ்வுகளை

ஞாபகச்செல்களில்
பத்திரப்படுத்தி

வெற்றி கிடைக்கும்
போது ஞாபகம் கொண்டால்
உவகை பல மடங்காகும்
சரி தானே?

## அவராய்

வாசிப்பும் யோசிப்பும்
கேட்டலும் காட்சியும்

சொல்லா பாடம்
அனுபவமாய் வாழ்க்கையில்

## என்னவாம்?

நமக்கும்
பகைமை கொண்டவர்க்கும்
அறிந்த நபரிடம்
அவர் சம்பந்தமில்லாதவற்றை
பேசினாலும்

பின்னர்
பகைமை கொண்டவர்
அவரிடம்
என்னவாம்?

மீண்டும்
புதிய சண்டைக்கு
காரணம் தேடி

பகைமை
வளர்க்க..

## அத்தனையும்...

பார்த்திலும்
படித்ததிலும்
செவி கொடுத்திலும்
யோசித்திலும்
அறிந்த

சந்திக்கின்ற
சிரமங்களை
பிரச்சனைகள்
என்று அழைக்காமல்
உள்ளிருக்கும்
வெளிப்படுத்தாத
திறமைகளை
வெளிக்கொணரும்
சவால்கள் என அழைக்கவும்

தோல்விகள் எல்லாம்
கிடைத்தே ஆக வேண்டும்
என்ற வைராக்கியம்
கொண்டு விடாமுயற்சி
செய்யவும்

வாழ்க்கை என்றால்
இன்பமும் துன்பமும்
சேர்ந்தது தான்

முயற்சிகள்
தோற்கலாம்
முயற்சிக்க
தவறக்கூடாது

இலக்கை அடைய
முடியாமால் போனதில்
என்ன இருக்கிறது

என்றால்
எதனால் தவறானது
என்று அனுபவம்
கிடைக்கிறதே

என்ற வாழ்வியல்
தத்துவங்கள் எல்லாம்
நமக்கானவர்களின்
கஷ்டங்களுக்கும்
இழப்புக்குமான
ஆறுதலும்
ஊக்கத்திற்குமாய்
சொல்ல முடிகிறது
நம்மால்

நமக்கு அவை
நிகழும் போது?

—

A.S. சுந்தரராஜன்,
மானாமதுரை.





ஓவியம்: மா. நிரல்யா,
மூன்றாம் வகுப்பு, சிங்கப்பூர்.

# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.